# இயேசு யார்?

பாடம் - 7

# ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்

சென்ற பாடம் வரை கீழ்க்கண்டவற்றைக் கற்றுக்கொண்டோம்.

1. இயேசு ஒருவரே மனிதனைப் படைத்து. அவன் பாவத்தில் வீழ்ந்தபோது தானே பூமிக்கு வந்து பாவமன்னிப்பை தன்னுடைய சிலுவைப் பாடுகளால் ஏற்படுத்திய தெய்வம்.

2. இயேசு கடவுளின் இரண்டாவது அம்சமும், மனிதருக்கு நியமிக்கப்பட்ட ஒரே தெய்வமுமாவார். அவருடைய பிறப்பு, வாழ்க்கை, செயல்கள், சொற்கள், உயிர்த்தெழுதல் ஆகிய சரித்திரப்பூர்வ சம்பவங்களும், இன்றும் அவர் செய்துவரும் செயல்களும், அவரே தேவன் என்பதை உறுதிப்படுத்துகிறது

3. மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் தினசரி பாவம் செய்து அதன் பலனைஅனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் இரத்தத்தாலன்றி பாவப்பரிகாரம் எதுவும் கிடையாது. மனந்திரும்பி புதிய வாழ்க்கை துவக்குகிற ஒவ்வொருவரும் இயேசுவினிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

4. ஜெபமும், வேதவாசிப்பும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர அவசியம்.

5. சாத்தான் என்னும் தீய சக்தியின் செயல்களைப் புரிந்துகொண்டு, தினசரி நாம் தேவபலத்தால் அதனை வென்று வாழவேண்டும்.

6. சாத்தானும் அவனுடைய தூதர்களும், தொடர்ந்து பாவத்தில் வாழும் அநேகமாயிரம் மனிதர்களும் நித்திய நரகத்தில் பங்கடைவார்கள். இயேசுவால் இரட்சிக்கப்பட்டு தூய வாழ்க்கை துவக்கியவர்கள் மட்டுமே மோட்சத்திற்குச் செல்வார்கள்.

இப்பாடத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன் செய்ய வேண்டிய ஒரு கடமையும், அவனுக்குக் கிடைக்கும் தேவனின் மூன்றாவது ஆள்தன்மையான பரிசுத்த ஆவியானவரின் பலத்தைக்குறித்தும் கற்றுக்கொள்வோம்.

இயேசுவை ஏற்றுக்கொண்டு புதிய வாழ்க்கை துவக்கிய மனிதன் அதனைத் தனக்குத்தானே உறுதி செய்துகொள்வதற்காகவும், தேவனை மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிக்கை செய்வதற்காகவும், தேவனுடைய கட்டளைப்படி நிறைவேற்றவேண்டிய முக்கிய நிகழ்ச்சியே ஞானஸ்நானம் என்று அழைக்கப்பப்படும் திருமுழுக்கு ஆகும்.

தமக்குள் திருமண ஒப்பந்தம் (நிச்சயதார்த்தம்) செய்துகொண்ட ஆணும், பெண்ணும் மனத்தளவில் அந்த நிமிடமே கணவன் மனைவியாகிவிட்டாலும், திருமணம் என்ற சமுதாயச் சடங்கினை நிறைவேற்றும்பொழுதுதான் முழுமையாக கணவன்-மனைவி என்ற சமுதாய அந்தஸ்த்தைப் பெறுகிறார்கள்.

அதுபோலவே இயேசுவை மனதார ஏற்றுக்கொண்டு. புதிய வாழ்க்கை துவங்கியவர்கள் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டு, தேவனுடையவனாகிவிட்டாலும் ஞானஸ்நானம் என்ற சடங்கினை நிறைவேற்றும்போதுதான் அவனது விசுவாசமும், ஆவிக்குரிய வாழ்க்கையும் புதுப்பிக்கப்பட்டு, முழுமையடைகிறான். இந்த முழுமைபெற்ற விசுவாசியே சபையில் இடம்பெற்று பரலோக ராஜ்யத்தில் பங்கடைகிறான்.

கணவன் மனைவி என்ற அந்தஸ்த்தைப்பெற திருமணம் என்ற நிகழ்ச்சி எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், சில இக்கட்டான சூழ்நிலைகளில் இந்தச் சடங்கு நிறைவேறாவிட்டாலும் அவர்களை கணவன் மனைவி என்று சமுதாயம் ஏற்றுக்கொள்கிறது.

அதுபோலவே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள அவகாசமில்லாத வேளைகளில் அதைப் பெற்றுக்கொள்ளாதவனும் இரட்சிக்கப்படுவான் என்பதை வேதம் காட்டுகிறது. மரிக்கும் தறுவாயிலிருக்கும் ஒருவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு, பாவமன்னிப்பைப்பெற்று மரிக்கிறான்.அவனுக்கு ஞானஸ்நானம் எடுக்க அவகாசம் இல்லை. அவனும் தேவனுடைய ராஜ்யத்தில் பங்கடைவான் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒருவனுக்கு அதன்பின் பூமியில் வாழும் வாய்ப்பும், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள காலமும் இருக்கும்போது அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறுவதே நீதியானதாகும்.

ஞானஸ்நானம் என்பது

1) கர்த்தராகிய இயேசு கட்டளையிட்டதாகும் (மத் 28.19 -யோ 3.5 -மாற் 16.15)

2)இயேசுவின்மேல் விசுவாசம்வைத்து இந்த ஞானஸ்நானத்தை எடுத்தவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவர் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார்.

3) ஞானஸ்நானம் என்பது பழைய மனிதன் தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்பட்டு, பாவமில்லாத புதிய மனிதன் வெளியே வருவதற்கான அடையாளச்செய்கையாகும். இது ஒருவன் மீண்டும் பிறந்த அனுபவத்தை தனக்குத்தானே உறுதிசெய்து, வெளியரங்கமாக மற்றவர்களுக்குச் சாட்சியாக அறிக்கையிடுவதாகும் (ரோ 6:4-6)

4) ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவன், தனது பாவங்களுக்காக மரித்த அவருடைய மரணத்தின் சாயலாக பழைய வாழ்க்கையை ஒழித்து, அவருடைய உயிர்தெழுதலின் சாயலாக மகிமையான புதிய வாழ்க்கை துவக்குவதாகும் (கொலோ 2.12 - 3.1.10)

5) ஞானஸ்நானம் என்பது பாவங்களினிமித்தம் தேவன் கொண்டுள்ள கோபத்திற்குத் தப்பிக்கொள்ளும் வழியாகும் (லூக் 3:7)

6) ஞானஸ்நானம் பெற்றவன் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டு, அவருடைய சரீரத்தின் அங்கமாக மாறுகிறான். (ரோமர் 6.4.6 - 1கொரி 12.13 )

இப்படியாக பழைய வாழ்க்கையின் முடிவாகவும், இயேசுவின் உயிர்தெழுதலின் சாயலாகவும் உள்ள ஞானஸ்நானம் என்ற எளிய சடங்கினை நீங்களும் பெற்றுக்கொள்வதற்குத் தடையேதுமில்லையே. ஞானஸ்நானம் பெறுவதால் எவ்வகையிலும் நஷ்டமில்லாதபோது, நீங்கள் அதை நிறைவேற்ற ஏன் தயங்கவேண்டும். விசுவாசத்தோடு அதை நிறைவேற்ற இன்றே ஏற்பாடு செய்யுங்கள்.

**நீங்கள் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தால் மீண்டும் பெறத்தேவையில்லை. எந்த வடிவத்திலாகிலும் நீங்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தை ஆவிக்குரிய அர்த்தத்துடன் நீங்கள் விசுவாசித்தால் போதுமானதாகும்.**

ஞானஸ்நானம் பெறுவது எப்படி? (மிகவும் எளியது)

1) இயேசுவையும், அவர் நமக்குத்தந்த ரட்சிப்பையும் விசுவாசிக்கிற (முழு மனதுடன் நம்புகிற) யாவரும் ஞானஸ்நானம் பெறத் தகுதியுடையவர்கள். ஞானஸ்நானம் பெறுமுன் ஒருவன் தன் பாவத்தை இயேசுவிடம் தனிமையில் அறிக்கைசெய்து, <u>புதிய வாழ்க்கை துவக்க நிச்சயித்து இருக்கவேண்டும்.</u> நீங்கள் அப்படி புதிய வாழ்க்கையினை ஏற்கனவே துவக்கியிருந்தால், ஞானஸ்நானத்தின்போது அந்தவாழ்க்கை புதுப்பிக்கப்படுகிறது. ஞானஸ்நானத்தின்போது மேற்சொன்ன ஆறு கருத்தினையும் நீங்கள் விசுவாசித்து, புதிய உணர்வுடன் தேவனுடைய பிள்ளையாக மாறி நீரிலிருந்து வெளியே வருகிறீர்கள்.

2) ஞானஸ்நான நிகர்ச்சி என்பது ஒரு தேவ ஊழியர் உங்கள் சரீரத்தைத் தண்ணீரில் மூழ்கி எடுக்கும் நிழ்ச்சியாகும்.

3) ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஏற்கனவே விசுவாசத்துடன் ஞானஸ்நானம் பெற்று, சத்தியத்தை அறிந்து தேவஆவியானவரால் நடத்தப்படும் ஒருவர் அல்லது சபைப்போதகர் தகுதியுடையவர். தேவஆவியானவரே மனிதனைத் தகுதிப்படுத்துகிறவராகையால் விசுவாசமே இதற்கு அளவுகோல்.

உங்களுக்கு அருகிலுள்ள கிறிஸ்தவ சபைப்போதகரிடம் உங்கள் விருப்பத்தைத் தெரிவித்தால் சில நாட்களுக்குள் நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார். இதற்குச்செலவு, காணிக்கை, எதுவும் அவசியமில்லை. ஞானஸ்நானம் பெறும் நாளன்று மனதினில் விசுவாசமும், கையில் ஒரு மாற்று உடையும் கொண்டுசென்றால் போதுமானது. நீங்கள் அணிந்திருக்கும் ஆடையுடன் இடுப்பளவு தண்ணீரில் நீங்களும் ஞானஸ்நானம் கொடுப்பவரும் இறங்கிநிற்கும்போது, இயேசுவின் நாமத்தினால் நீங்கள் ஒருமுறை தண்ணீரில் மூழ்கி எழச்செய்வார். பின்னர் வெளியே வந்து நீங்கள் கொண்டுவந்துள்ள மாற்று உடையினை அணிந்துகொண்டு சபையாரோடு சேர்ந்துகொள்ளவேண்டியதுதான்.

ஞானஸ்நானம் பெற்ற விநாடி முதல் நீங்கள் புதிய மனிதனாக, கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த குழந்தையாகிவிடுகிறீர்கள். மற்ற மனிதர்கள் உங்களை நம்ப மறுத்தாலும், நீங்கள் தேவனுடைய பார்வையில் பரிசுத்தமான குழந்தைதான். இந்தக் குழந்தை வளர வேதவசனமாகிய களங்கமில்லலாத ஞானப்பாலும், ஜெபத்தின் மூலம் கிடைக்கும்

வல்லமையும் அவசியம். நமது தாய்மொழியிலேயே தேவன் நமக்குத் தந்துள்ள பரிசுத்த வேதாகமத்தை தினசரி நீங்கள் வாசிப்பதன் மூலமும், தினசரி ஜெபிப்பதன் மூலமும் ஆன்மீக வாழ்வில் உயர்ந்துகொண்டே செல்வீர்கள். ஆன்மீக வாழ்வில் நீங்கள் பரிசுத்தத்திலும் தேவனுடைய கிருபையிலும் அதிகமதிகமாய் வளரும்போது, உலக மாயைகள் உங்கள் கண்களுக்கு அற்பமானதாகவும், தேவனுடையவைகளே பெரியதாகவும் தெரியும்.

இன்றே தாமதிக்காமல் இந்த அனுபவத்தைப்பெற தேவன் உங்களுக்குக் கிருபை செய்வாராக

## <u>பரிசுத்த ஆவியானவர்</u>

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மூன்றாவது ஆள்தன்மையாயிருப்பவர். பரிசுத்த வேதாகமத்தை எழுதியவர் இவரே என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். நம்மை இயேசுக்கிறிஸ்துவின் விசுவாசத்திலும், பரிசுத்த வாழ்க்கையிலும் தேற்றி, வேத வசனநகளை

நமக்கு விளங்கக் காட்டுகிறவர் பரிசுத்த ஆவியானவரே. பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனிடமிருந்து குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து நமக்காக அனுப்பியவர். பரிசுத்த ஆவியானவர் கண்களினால் காணப்படாத தேவ அம்சமாக இருந்தாலும், அவரைப் பெற்றுக்கொண்டவர்களால் அறியப்பட்டும், தனது செயல்களால் மற்றவர்களுக்கு சாட்சியாக வெளிப்படுகிறவருமாயிருக்கிறார். நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரை உலகம் அறியாது.(யோ 14 :16)

**ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும்** பரிசுத்த ஆவியானவர் கீழ்க்கண்டவற்றைச் செய்கிறார்.

1. விசுவாசித்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளை என்பதை தினசரி அவர்களுக்கு நினைவூட்டி வருகிறார்.(எபே 4:14 - ரோம 8:24)

2. வேதவாக்கியங்களையும், இயேசுவின் வார்த்தைகளையும், நமக்குத் தேவைப்படும் இடங்களிலெல்லாம் நினைப்பூட்டி செம்மையான வரியில் நம்மை நடத்துகிறார்(யோ 14:26 - ரோம 3:1 )

3. நமது சோர்வுகளில் நம்மைத் தேற்றி, பயங்கள் யாவையும் போக்குகிறார்(யோவா 16: 7)

4. பாவங்களைக்குறித்தும், அக்கிரமநகளைக்குறித்தும் நமக்குள்ளும், நம்மைச்சுற்றி இருப்பவர்களுக்கும் எடுத்துரைத்துக் கண்டிக்கிறார். நாம் செய்யும் செயல்கள் அனைத்திலும் உடனிருந்து கிருபைசெய்து, நாம் மற்றவர்களுக்கு இயேசுவைக்குறித்த சாட்சியாக இருக்கும்படி செய்கிறார். (யோ 16:7-11)

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட நம்மிடத்தில் அவர் கீழ்க்கண்ட அதிசயங்களை நமது தினசரி நடைமுறை வாழ்வில் செய்வதை உணருகிறோம்.

1) சத்தியத்தில் நடக்கவும், சத்தியத்திற்காகப் போராடவும், சத்தியத்தை எடுத்துரைக்கவும், தேவைப்படும் இடங்களிலெல்லாம் தைரியத்தையும், பலத்தையும் தருகிறார். பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பவர்களை யாரும் எதிர்த்துநிற்க முடியாது.

2) நாம் வசிக்கும் இடம், தொழில் செய்யுமிடம் எங்கும் பலவித பிரச்சனைகளில் சிக்கியிருப்பவர்களுக்கு நாம் ஆறுதல் செய்யும்படியாக வைக்கிறார். நாம் பிரச்சனைகளைத் தீர்ப்பவர்களாக, சமாதானத்தைக் கொண்டுவருகிறவர்களாக அங்கு இருக்கிறோம். நம்மை உண்மையுள்ளவன் என்று சாட்சிபெற்று உயரும்படியாக செய்கிறார். ஒவ்வொரு நாளும் பலவித ஆபத்துக்கள் மோசங்கள் வரும்போது நம்மையும், நமக்காக நம்மோடிருப்பவர்களயும் சேர்த்து அதியசயமானவிதமாய் காப்பாற்றுகிறார்.

3) நம்மை அழிக்க எழும் எந்த உபாயமும் செல்லாதபடி செய்கிறார், ஆயிரமாயிரம் பிரச்சனைகள் நம்மைச் சூழ்ந்திருக்கும்போது நாம் கவிழ்ந்தவிடுவோம் என்று மற்றவர்கள் நினைப்பார்கள். ஆனால் நாமோ எல்லாவற்றையும் அவருடைய பலத்தினால் அதிசயமாய் முறியடித்து உயர்வுடன் வெளியே வருவோம்.

4) நன்மையும் செம்மையுமான நமது வாக்கின்படி யே காரியங்கள் நடப்பதைக்கண்டு

அனைவரும் ஆச்சரியமடைவார்கள். அநேகர் நம்மிடம் மதிப்பும் நட்பும் கொள்ளும்படி செய்வார்.

இவைகளைத்தவிர தேவன் தம்முடைய நாம மகிமைக்காகவும், சுவிஷேசப் பணிகளுக்காகவும், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட நபர்களுக்கு தமது சித்தத்தின்படியே ஆவியின் வரங்களைத் தந்தருளுகிறார். அவையாவன 1) ஞானத்தைப் போதிக்கும் வரம் 2)அறிவை உணர்த்தும் வரம் 3)தீர்க்கத்தரிசனம் சொல்லுதல் 4)விசுவாச வரம் 5)நோய்களைக் குணமாக்குதல் 6)பலவித அற்புதநகளைச் செய்தல் 7)ஆவிகளைப் பகுத்தறிதல் 8)பல பாஷைகளைப் பேசுதல் 9)பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

இன்றும் இந்த வரங்களைப்பெற்ற ஊரியர்களால் தேவன் அநேகருடைய நோய்களைக் குணமாக்கி பிரச்சனைகளைத் தீர்த்து, மனந்திரும்பும்படி செய்து, பிசாசுகளைத்துரத்தி அற்புதங்களைச் செய்துவருகிறார். இதன்மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படுவதுடன், அநேக மக்களுக்கு அவருடைய கிருபை கிடைக்கிறது. மேலும் அவற்றைச் செயல்படுத்தும் தேவ ஊழியர்கள் கூறும் சத்தியத்தை மக்கள் நம்புவதற்கு ஏதுவாக அமைகிறது. உலகப்பிரசித்திபெற்ற தேவஊரியர்களான பில்லிகிரகாம் பால்யோங்கிசோ, பென்னிஉறின் ஆகியோர் மூலம் தேவன் வல்லமையாய் கிரியைசெய்து வருகிறார்.அவர்களுக்கு அருகில் செல்பவர்கள் கூட பாவ உணர்வடைந்தும், சரீர சுகமடைந்தும் தேவனை ஏற்றுக்கொள்கிறார்கள். உங்கள் குடும்பங்களிலும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் இயேசுவே தீர்வு என்ற விசுவாசத்துடன் நீங்கள் ஜெபிக்கும்போது அதிசயமாய் பிரச்சனைகள் தீர்வதைக் காண்பீர்கள்.

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிகள் பெற்றுக்கொள்வது எப்படி?

பரிசுத்த ஆவியானவர் ஞானஸ்நானம் பெறும் ஒவ்வொருவரையும் தேவனுடைய பிள்ளைகள் என்று முத்திரையிட்டு அவர்களுக்குள் ஏற்கனவே வந்துவிடுகிறார். இயேசுவின் வசனங்கள் ஒருவனுக்குள் தங்கியிருக்கும்போது அதுவே ஆவியாகவும், உண்மையாகவும் இருக்கிறது. ஆனாலும் ஆவியின் வரங்கள் அனைத்தும் அனைவருக்கும் உரியதல்ல. யாருக்கு என்ன வரம் என்பதைத் தேவ ஆவியானவரே முடிவு செய்கிறார். ஆவியின் வரங்கள் திருச்சபையானது பக்திவிருத்தியடைவதற்காகவும், சுவிசேஷ வேலைக்காகவும் மட்டுமே வழங்கப்படுகிறது. மனிதனை மகிமைப்படுத்துவதற்காக அல்ல.

ஒரு தொழிலகத்தில் இயந்திரப் பிரிவில் பணியாற்றுபவர்களுக்கு அதற்கான சுத்தியல், மற்றும் இதர கருவிகள் வழங்கப்படும். அங்கு காவலராகப் பணியாற்றுகிறவர்களுக்கு டார்ச் லைட் மற்றும் கைப்பிரம்பு ஆகியவை வழங்கப்படும். பணக்காப்பாளருக்கு பணமும், பீரோவும் சாவிகளும் வழங்கப்படும். இவைகளில் எதுவும் ஒருவருக்கு வழங்கப்படவில்லை என்றால் அவர் அந்தத் தொழிலகத்தில் பணியாற்றவில்லை என்று அர்த்தமாகாது. அங்கு மேலாளராகவும், அதிகாரிகளாகவும் பணியாற்றுபவர்களுக்கு மேற்படி எதுவும் வழங்கப்படாது என்பதை அறிவோம். அதே போலத்தான் குறிப்பிட்ட வரங்கள் ஒருவருக்குக் கொடுக்கப்படவில்லை என்பதால் அவர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று அர்த்தமாகாது. குறிப்பாக ஒருவர் அந்நியபாஷை பேசவில்லை என்பதாலோ, தீர்க்கதரிசனம் சொல்லவில்லை என்பதாலோ அவருக்குள் பரிசுத்த ஆவியானவர் இல்லை என்று சொல்லிவிடக் கூடாது. தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளும் யாவருக்கும், தேவன் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியைத் தருகிறார்(லூாக் 11.13) என்பது சத்தியமாக இருப்பதால், இன்னார் தேவ ஆவியைப் பெறவில்லை என்று யாரும் கணித்துவிட முடியாது. ஆனால் ஆவியின் வரங்களை தேவன் தமது சித்தத்தின்படியே பகிர்ந்தளிக்கிறார். இன்ன வரம் வேண்டும் என்று ஒருவர் வேண்டிக்கொள்வதால் மட்டும் அதை அடைந்துவிட முடியாது. அது தேவனுடைய சித்தமாயிருந்தால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் ஆவிக்குரிய வரங்கள் ஒவ்வொருவரும் தேவனுடைய வேலையைச் செய்வதற்கு அவர்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும்படி வழங்கப்படுவதால், எந்த வேலையும் செய்யாதவர்களுக்கு வரங்கள் வழங்கப்படுவது இல்லை என்பது சத்தியம். அதாவது நீங்கள் தேவனுக்காக எந்த வேலையும்(சுவிஷேசப்பணியில் எவ்விதத்திலாவது பங்கடைதல்) செய்யாதபோது, உங்களுக்கு எவ்வித வரமும் அவசியமில்லையாகையால் தேவன் அவற்றைத் தருவதில்லை.

எனவே வரங்கள் அதிகம் வேண்டுமானால் முதலாவது தேவன் தம்முடைய வேலையை அதிகமாய் தரும்படி கேளுங்கள். அதன்பின் அந்த வேலையை நிறைவேற்றுவதில் நமக்குப் பிரயோஜனமாய் இருக்கும்படி அதிக வரங்களைத் தந்தருளுவார்.

ஆவிக்குரிய வரங்களின் பட்டியல் அத்துடன் முடிவுற்றதாகவும் கருத முடியாது. தேவனுக்கென்று இனிய பாடல்களை ஆவியில் நிறைந்து பாடுவது, இசைக்கருவிகள் வாசிப்பது, பலவித ஊரியங்களுக்குத் தேவையான திறமைகள் ஆகியவையும் தேவனுக்கென்று

பயன்படுத்தபபடும்போது வரங்களாகின்றன. ஜெபிக்கும் வரம், விசுவாச வரம் ஆகிய வெளியில் மற்றவர்களுக்குத் தெரியாத வரங்களும் உண்டென்பதால் நாம் யாரையும் அற்பமாக எண்ணக்கூடாது.

ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒவ்வொருவருக்கும் முதலில்சொன்ன ஆறு கிரியைகளையும் தேவன் செய்கிறார். வரங்களையோ தமக்குச் சித்தமானவர்களுக்குக் குறிப்பிட்ட பணிகளுக்காகத் தருகிறார். எனவே குறிப்பிட்ட வரம் தனக்குக் கிடைக்கவில்லையே என வருந்தத்தேவையில்லை. நீங்கள் ஆவிக்குரிய வார்வில் வளர்ந்து. தேவனுடைய சித்தப்படி அநேக வரநகளைப்பெற்று அவருடைய நாம மகிமைக்காக வாழ இயேசுவின் நாமத்தினால் வார்த்துகிறோம்.

1) **ஞானஸ்நானம் எடுப்பவர்களுக்கு இயேசு கொடுத்த வாக்குத்தத்தம் யாது?**

2) **நீங்கள் இன்னும் ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் ஏன் பெறவில்லை?**

3) **பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்குள் வாசம்செய்யும்போது கிடைக்கும் வெளியரங்கமான பலன்கள் யாவை?**

4) **ஆவியின் வரங்களைப் பெறுவதற்கு என்ன தகுதி வேண்டும்?**

5) **ஆவியின் வரங்களினால் என்ன பயன்கள் கிடைக்கிறது?**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**
மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**

## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை

� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.